Upgrading post of A.E.O.|D.I. of Schools to cadre of Headmaster.

* 56 *Q.*—Dr.T. R. JANARTHANAM (on behalf of Thiru D. Santosham, and Thiru P. R. Thomas): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representation has been received from the Tamil Nadu Graduate Teachers' Union, Nagercoil (Reg. No. 19|71) to upgrade the post of Assistant Educational Officers and Deputy Inspectors of Schools to the cadre of Headmaster; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) உதவிக் கல்வி அலுவலர் மற்றும் பள்ளித் துணை ஆய்வர் பதவிகளை தலைமையாசிரியர் பதவியின் தரத்திற்கு உயர்த்த நியாயமான காரணம் எதுவுமில்லை எனக் கருதப்படுகிறது.

சாலைகளுக்கு தார்

* 57 **வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் மற்றும் திரு. க. மீனாட்சி சுந்தரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) 1982-83 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு சாலைகள் போட மத்திய அரசு வழங்கிய தார் அளவு எவ்வளவு?

(இ) தமிழகத்திற்கு சாலைகள் போட ஆண்டுக்கு சராசரி எவ்வளவு தார் தேவைப்படுகிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) 1982-83 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு சாலைகள் போட மத்திய அரசு 1,00,000 டன் தார் வழங்கியது.

(இ) தமிழகத்திற்கு சாலைகள் போட ஆண்டிற்கு சராசரி 1,00,000 டன் தார் தேவைப்படுகிறது.

டாக்டர் இரா. சனார்த்தனம்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே பெரு மழையின் காரணமாக பாதைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தார் போட்ட சாலைகளை மேற்கொள்ள இருக்கின்ற நிலையிருப்பதால், மேலும் அதிக அளவிலே தார் பெறுவதற்கு அரசு வற்புறுத்துகிறதா? அப்படி இல்லை யென்றால் நாமே வெளிநாடுகளிலேயிருந்து தார் பெறுகின்ற உரிமையைப் பெறுகின்ற நோக்கம் அரசுக்குண்டா?